# பதினைந்தாம் அத்தியாயம்

இந்த அத்தியாயத்தை புருஷோத்தம யோகம் என்பர். பத்தன்–முக்தன் என்ற இருவகைப்பட்ட ஜீவர்களைவிட விலக்ஷணனானவன் வேறுபட்டவன் ஆகையால் புருஷோத்தமன் ஆகிறான் எனப்படுகிறது.

ஸம்ஸாரத்தை விலக்ஷணமான ஓர் அரச மரமாக உருவகப்படுத்தி 'இதை வெட்டி எறியாத ஜீவர்களின் பத்தர்கள் ஆவார்கள். க்ஷர ஜீவர்களும் இவரே. ஸம்ஸார வ்ருக்ஷத்தை வெட்டி எரிந்து விலகி நிற்கும் ஜீவர்கள் முக்தர்கள்–அக்ஷரர்கள் ஆவார்கள். இவ்விருவகை ஜீவர்களைவிட மேம்பட்டவன் எம்பெருமான்' என்று இந்த அத்தியாயத்தில் கூறப்படுகிறது.

உலகில் மரத்தின் வேர்கள் கீழும்–கிளைகள் மேலும் இருக்கும். இந்த ஸம்சார விருக்ஷத்திற்கு வேர் மேல் புறத்திலும் இலைகள் கீழ் புறத்திலுமாக இருக்கும். இங்கு வேர் என்ற சொல் பிரம்மாவைக் குறிக்கிறது. அவர் தானே ஸம்ஸாரத்தைச்ருஷ்டி செய்கிறார். அவர் ஸம்ஸார மண்டலங்களுக்கு மேல் இருப்பதனால் இந்த ஸம்ஸார விருக்ஷத்திற்கு வேர் மேலிருப்பதாகச் சொல்லப்படுகிறது. மனுஷ்ய–ஸ்தாவர திர்யக்குகள் ஆகிற கிளைகள் பிரம்மாவிற்குக் கீழே இருப்பதனால் அத:சாகம்–கீழே கிளைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இந்த மரம் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும். ஆகையால் அழிவற்றதாகும் என்பர். வேதங்கள்தாம் இந்த மரத்திற்கு இலைகள். பிரபஞ்சமாகிய இந்த விருக்ஷத்தை இவ்வாறு அறிபவன் வேதம் அறிந்தவன் ஆவான்.

இம்மரத்தின் கிளைகள் கீழும் மேலும் பரவியுள்ளன. ஸத்துவாதி குணங்களினால் வளம் பெறுகின்றன. சப்தாதி விஷயங்களே இந்த மரத்தின் தளிர்கள். கீழே மனித உலகில் கர்மங்காளகிற மூலங்கள் பரவியுள்ளன. ஸம்ஸாரமாகிற இந்த மரத்திற்கு மூலம், மேலே பிரம்மலோகத்தில் உள்ளது. மனித உலகில் கிளைகள் இருக்கின்றன. இங்குச் செய்யப்படும் கர்மங்களை அநுஸரித்துக் கீழும் மேலும் கிளைகள் பரவுகின்றன என்ற இவ்விஷயனளை வேதம் அறியாத ஸம்ஸாரிகள் அறிய மாட்டார்கள். மற்றும் "நான் மனிதன் நான் இன்னானைப் பெற்றேன், இன்னானுக்கு நான் பிள்ளை. இதற்கு ஏற்றப் பரிகாரங்களை–ஸாதனங்களை உடையவன். என்றுதான் ஸம்ஸாரிகள் ஆவார்கள். கீழே கூறியபடி அறியமாட்டார்கள்.

ஸத்துவாதி குணங்களால்தான் போகங்கள் உண்டாகின்றன. அவற்றில் பற்றின்றி இருப்பதே ஸம்ஸாரத்தை அழிக்கும். அவற்றில் உண்டாகும் பற்றுதான் ஸம்ஸாரத்திற்குக் காரணம். அஜ்ஞானத்தில்தான் இந்த ஸம்ஸாரம் நிலை பெற்றிருக்கிறது என்று இவ்வாறு வேதம் அறியாத கேவல ஸம்ஸாரிகள் அறிய மாட்டார்கள்.

பலவிதமாக நன்றாக ஊன்றிய வேர்வஅளுடைய இந்த ஸம்ஸாரவிருக்ஷத்தை அரச மரத்தை உலகபோகங்களில் பற்றின்மை என்ற கூரிய கத்தியினால் வெட்டி வீழ்த்தி மற்ற விஷயங்களில் கொஞ்சமும் பற்றுதல் அற்றவனாக இருந்துகொண்டு ஆத்மாவைத்தேட வேண்டும். ஆத்மாவே ப்ராப்யம் ஆகும். அதைப் பெற்றவர்கள் மீண்டும் ஸம்ஸாரத்திர்க்குத் திரும்ப மாட்டார்கள். நமக்கு அநாதிகாலமாக ஏற்பட்ட அஜ்ஞானம் இதர போகங்களில் பற்றுதல் முதலியன பகவத் ஸங்கல்பத்தினாலேயே ஏற்பட்டவை. அவை அகலுவதற்கு ஆதிபுருஷனாகிய அவனைச் சரணமாகப் பற்ற வேண்டும்

உடலே ஆத்மா என்ற விபரீத ஜ்ஞானம் விலக வேண்டும். விஷயப்பற்று என்னும் குற்றத்தை தோஷத்தை வெல்ல வேண்டும். இப்படி இருந்தால் ஆத்ம ஜ்ஞானத்தில் நிலை பெறலாம். இதனால் மற்ற விஷயங்களில் ஆசை அகலும். ஸுகம் துக்கம் முதலிய த்வந்த்வங்களை–இரட்டைகளை விட்டு அகலலாம். சரீரம்–ஆத்மா இவற்றின் தத்துவஜ்ஞானம் உண்டாகும். ஜ்ஞான ஸங்கோசம் நீங்கப் பெற்றதனால் அந்த ஆத்ம ஸ்வரூபத்தைப் பெறுகிறார்கள். அர்ஜுன, இவை அனைத்தும் என்னைச் சரணமாகப் பற்றுகிறவர்களுக்கு என் அநுகிரகத்தினால் உண்டாகின்றன.

பதினைந்தாம் அத்தியாயம்

இந்த ஆத்மஸ்வருபத்தைப் பெற்றவர்கள் திரும்ப மாட்டார்கள். மறுபடி ஸம்ஸாரிகளாக மாட்டார்கள் என்றபடி. இந்த ஒளிமயமான ஆத்மா என்னுடைய விபூதி. இதை ஸூர்யன், சந்திரன், அக்னி ஆகிய எவரும் பிரகாசப்படுத்த அறிவிக்கவல்லவர் அல்லர்.

அர்ஜூனன்–கிருஷ்ண! ஜ்யோதிரூபமான ஆத்மா உன்னுடைய விபூதி–அம்சம் என்றாய். அப்படியானால் இந்த ஆத்மாக்கள் எல்லோரும் ஒரே வகையில் தானே இருக்க வேண்டும்? சிலர் எப்பொழுதும் தோஷம் அற்றவர்களாக நித்யஸூரிகளாய், மற்றும் பலர் ஸம்ஸார ஸாகரத்திலிருந்து விடுபட்டுக் குற்றம் நீங்கியவராய் முக்தராய் இருக்க மற்றும் சிலர் ப்ரக்ருதி ஸம்பந்தத்தினாலேயே துக்கங்களை அநுபவித்துக்கொண்டு இருக்கிறார்களே? ஏன் இப்படிப் பல நிலைகள்?

க்ருஷ்ணன்–துக்கங்களை அநுபவித்துவரும் பக்த ஜீவர்களும் நித்ய–முக்தர்களைப்போல் எனக்கு அம்சம் ஆனவர்கள்தாம். இவர்களும் நித்யஸூரிகளைப்போல் நித்யரானவர்களே ஆனாலும் இவர்கள் தாங்கள் வஸிக்கும் இந்த உலகத்தில் தங்கள் அநாதி கர்மாக்கள் காரணமாக அவற்றுக்குத் தகுந்தவாறு ஜீவனம்–வாழ்வு பெறுகிறார்கள். இவர்கள் ஒரு சரீரத்திலிருந்து கிளம்பும்போது பிரகிருதியான சரீரத்திலிருக்கும் மனத்துடன் கூடிய ஆறு இந்திரியங்களையும் இழுத்துச் செல்லுகிறார்கள். அவற்றைத் துணைகொண்டு அறிவு பெற்று வேலை செய்கிறார்கள். இப்படி இருப்பினும் இவர்கள் என்னுடைய அம்சம் என்று சொல்லத்தடை இல்லை. இப்படி இருப்பவர்களில்தான் சிலர் சரணாகதி செய்து ஸம்ஸாரத்தை விட்டு என்னைப் பெற்றுப் பேரானந்தம் பெறுகிறார்கள்.

ஒரு சரீரத்திலிருந்து கிளம்பும்போது மற்றொரு சரீரத்தை அடையும்போதும் இப்படித்தான் இந்திரியங்களுடன் செல்கிறார்கள். இந்திரியங்களை நியமிப்பதனால் இவனை ஈச்வரன் என்றும் சொல்லலாம். மலர் முதலியவற்றிலிருந்து காற்று மணத்தை எடுத்துச் செல்லும்போது மணத்திற்கு ஆச்ரயமான நுண்ணிய மகரந்தப் பொடிகளுடன் சேர்ந்து மணத்தை எடுத்துச் செல்வது உலகில் கண்கூடு. அதுபோல் இந்திரியங்களை அவற்றுக்கு ஆதாரமான நுண்ணிய பூதங்களுடன் எடுத்துச் செல்கிறான் ஜீவன்.

இவன் காது–கண்–த்வக்–நாக்கு–மூக்கு–மனம் என்ற ஆறு இந்திரியங்களை சப்தம் முதலிய விஷயங்களை அநுபவிப்பதற்குப் பாங்கானவையாக ஆக்கி அவற்றைக்கொண்டு சப்தாதி விஷயங்களை அநுபவிக்கிறான்.

சரீரத்தையே ஆத்மாவாக நினைப்பவர்கள் எப்பொழுதுமே இப்படித்தான் நினைப்பார்கள். சரீரத்தைவிட்டு ஜீவன் கிளம்பும் போதும், சரீரத்தில் இருக்கும்போதும் விஷயங்களை அநுபவிக்கும்போதும் சரீரத்தைவிட ஜீவன் வேறு என்பதை உணரமாட்டார்கள். அவ்வாறே ஜீவன் அறிவையே இயற்கையாக உடையவன் என்பதயும் அறியார்கள்.

சரீராத்ம விவேகம் உள்ளவர்கள் கீழ்கூறிய எல்லா நிலைகளிலுமே ஆத்மாவை சரீரத்தைவிட வேறுபட்டவனாய் அறிகிறார்கள். முன்னவர்கள் ஊனக் கண் உடையவர்கள். பின்னவர் ஜ்ஞானக் கண் உடையவர்கள்.

லோகநாதனான என்னிடம் சரணாகதி செய்து கர்மயோகம் முதலியவற்றில் முனைகிறவர்கள் பரிசுத்தமான மனம் பெற்று த்யானம் என்ற கண்ணால் ஜீவன் சரீரத்தில் இருக்கும்போதும் அதைவிட வேறுபட்டவனாயும் அவனுக்கு ஏற்பட்ட நிலைமையோடு இருப்பவனாகவும் பார்க்கிறார்கள். சரணமாகப் பற்றாவிடில் மனத்தூய்மை பெறமாட்டார்கள். ஆகவே அவர்களுடைய மனம் ஆத்மாவைக் காண்பதற்கான திறமையற்றதாக ஆகிறது. அதனால் ஆத்மாவை உள்ளவாறு அறிவதில்லை. அர்ஜூன! ஸூரியன், சந்திரன், அக்னி முதலியன தம்முடைய தேஜோமயமான கிரணங்களால் இருளை அகற்றி உலகைப் பிரகாசப்படுத்துகின்றன. அப்படிப்பட்ட அவற்றின் தேஜஸ்ஸூம் என் அநுக்கிரகத்தினால் அவற்றுக்கு உண்டாகியுள்ளது.

நான் பூமிக்குள் புகுந்து தட்டுத் தடங்கலற்ற என்னுடைய சக்தியினால் எல்லாப் பிராணிகளையும் தரிக்கிறேன். அம்ருதரஸமயமான சந்திரனாக நான் இருந்து கொண்டு ஓஷதிகள் செடிகள் முதலியவற்றைப் புஷ்டி நிறைந்தவனாகச் செய்கிறேன். நானே தான்

வைச்வாந்ரன் என்ற அக்கினியாக இருந்து பிராணிகளின் உடலில் புகுந்து பிராணன்,அபானன் என்ற காற்றுக்களுடன் சேர்ந்து பிராணிகள் நாலு வகையான ஆஹாரங்களையும் ஜீரணிக்கச் செய்கிறேன்.

அர்ஜுனன்–கிருஷ்ணா!இதுவரை நீ நான் ஆதித்யனாகவும் சந்திரன் அக்னி வைச்வானரன் இவர்களாகவும் இருந்து கொண்டு அவை செய்யும் காரியங்களைச் செய்து வருகிறேன்,என்றாய்.நீயே அவையா?அல்லது அவை உன்னிலும் வேறுபட்டனவா?

பகவான்–அவையே நான் ஆக மாட்டேன்.நான் வேறு.அவை வேறு.ஆயினும் அவை நானே என்றதற்குக் காரணம் உண்டு.சரீரத்தையும் ஆத்மாவையும் வேறாக இருப்பினும் ஒன்றாக சொல்வது கூடும்.இம்முறையில் கீழே கூறப்பட்ட சூரியன்,சந்திரன்,அக்னி வைச்வானரன் இவற்றுக்கு நான் ஆத்மாவாக உள்ளேன்.அவை எனக்குச் சரீரங்கள்.ஆகவே அவையே நான் என்றேன்.ஸகலப் பிராணிகளிடத்து ஹ்ருதயத்தில் நான் இருக்கிறேன்.அங்கு இருந்து கொண்டு என் ஸங்கல்பத்தினால் யாவற்றையும் செயற்படுத்துகிறேன்.ஆகையால் யாவற்றுக்கும் நான் ஆத்மா. நினைவு,அறிவு,அறிவின்மை–ஊஹம் முதலிய யாவும் என்னாலேயே உண்டாகின்றன. வேதங்கள் யாவற்றாலும் அறியத்தக்கவன் நானே.வேதங்கள் கூறும் பலனை அறிபவனும் நானே.ஆகையால் என்னிடம் இருந்துதான் வேதங்களின் ஸூக்ஷ்மார்த்தங்களை அறிய வேண்டும்.

வேதம் முதலிய பிரமாணங்களில் க்ஷரன் அக்ஷரன் என்று இரண்டு வகையான ஜீவங்கள் கூறப்பட்டுள்ளனர். இது பிரஸித்தம் இவரகளில் நான்முகன் முதல் பசும்புல்,புழு வரையில் உள்ள ஜீவர்கள் ப்ரக்ருதி ஸம்பந்தம் உள்ளவர்கள்.ஆகவே பக்தர் க்ஷரர் எனப்படுவர்.ப்ரக்ருதியின் ஸம்பந்தம் விலகப்பெற்றுத் தன் நிலைமையோடு இருக்கிற முக்தர்கள் அக்ஷரர் எனப் பெறுகின்றனர்.

இவ்விரு வகை ஜீவர்களைக்காட்டிலும் உத்தமனான புருஷன் வேறுபட்டவன் ஆகிறான். பரமாத்மா என்ற வேதங்கள் அவனைக் குறிக்கும் ப்ரமாணங்களைக் கொண்டு அறியப்பெறும் அசேதனம்,அசேதனமான ப்ரக்ருதி ஸம்பந்தம் உள்ள பத்தன்,இது நீங்கப் பெற்ற முக்தன் என்ற மூன்றிலும் ஆத்மாவாக ப்ரவேசித்து அவற்றைத் தாங்குகிறபடியாலும் எவ்வித விகாரமும் இல்லாதிருக்கையாலும் அவற்றை நியமிக்கையாலும் அவற்றிலும் வேறுபட்டவனாகிறான் உத்தம புருஷன்.அர்ஜுனா!கீழே கூறிய வண்ணம் புருஷோத்தமனான என்னை மயக்கமின்றி மற்றவற்றைக் காட்டிலும் விலக்ஷணனாக அறிபவன் என்னை பஜனம் செய்வான். எல்லாம் அறிந்து எல்லா விதத்திலும் என்னயே பூஜிக்கிறான்.

இடகி அறிந்து பஜனம் செய்யும் வழிகளில் அறிவுற்றவனாய் ,உபாயத்தை அநுஷ்டிப்பாயாக என்று பகவான் கூறினான்.